1973 நவம்பர் 30]

Taxi services in Madras City

*513 *Q*.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether taxi services in Madras City is to be brought under a State owned Corporation; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) இதற்கான ஓர் செயற்குறிப்பு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினிடம் உள்ளது. என்றாலும் அது இன்னும் முதற் கட்டமான பரிசிலனையிலேயே இருந்து வருகிறது.

திரு. நா. வீராசாமி: ஏற்கனவே கூட்டுறவு முறையில் வழங்கப் பட்டிருக்கிற டாக்ஸிகளுக்கு இன்று ஏற்றப்பட்டிருக்கிற பெட்ரோல் விலை காரணமாக நாள் ஒன்றுக்கு ரூ. 10 கூட மிச்சம் இருப்பதில்லை. ஆகவே அந்தத் தொழில் பாதிக்கக்கூடிய நிலையில் இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் எல்லா டாக்ஸிகளையும் நம்முடைய அரசாங்கமே ஒரு கார்ப்பரேஷன் அமைத்து எடுத்துக் கொண்டால் அரசால் அதை லாபகரமாக நடத்த முடியுமா என்பதை அரசு பரிசிலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்த யோசனை இந்த நெருக்கடிகள் எல்லாம் வருவதற்கு முன்னால் கொடுக்கப் பட்ட யோசனை. அந்த யோசனை ஆரம்ப கட்டத்தில் இருக்கிறது. அப்படி ஏற்று நடத்துவதன் மூலம் சீர் செய்யமுடியுமா, சீர் பெற்று வராது என்றால் அந்த யோசனையை ஏற்று நடத்துவது பலன் தருமா? ஆகவே ஆராய்ச்சிக் கட்டத்தில் இருப்பதாகக் குறிப்பிட்டேன்.

பெருமாநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம்

*514 **வினா—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், பெருமாநல்லூரில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் ஒன்று கட்டும் செயற் குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?